செ.வெ.எண்: 39/மே/2020 நாள்: 15.05.2020

**மலேசியா நாட்டில் இருந்து ஏர்இந்தியா விமானம் மூலம் திருச்சிராப்பள்ளி விமான நிலையத்திற்கு கடந்த (9.5.2020) வருகை புரிந்த 178 பயணிகளை இன்று(15.5.2020) இரண்டாவது கட்டாமாக பரிசோதனை செய்ததில் எவருக்கும் நோய் தொற்று இல்லை என உறுதி செய்யப்பட்டதால் அவர்களது சொந்த ஊருக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

----------

மலேசியா நாட்டில் இருந்து ஏர்இந்தியா விமானம் மூலம் திருச்சிராப்பள்ளி விமான நிலையத்திற்கு கடந்த (9.5.2020) வருகை புரிந்த 178 பயணிகளை பரிசோதனை செய்ததில் எவருக்கும் கொரோனா வைரஸ் நோய் தொற்று இல்லை என உறுதி செய்யப்பட்டது. இவர்கள் சேதுராப்பட்டி அரசு பொறியியல் கல்லூரி விடுதியில் 117 நபர்கள் தனிமைப்படுத்தப்பட்டு இருந்தனர். மீதமுள்ள 60 நபர்கள் குருஹோட்டல், ராஜசுகம்ஹோட்டல், பெமினாஹோட்டல் மற்றும் பல்வேறு ஹோட்டல்களில் தங்கவைத்து தனிமைப்படுத்தப்பட்டு இருந்தனர். கிட்னி தொடர்பான சிகிச்சைக்கு 1 நபர் திருச்சிராப்பள்ளி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு இருந்தார்.

இவர்கள் அனைவருக்கும் மீண்டும் 7 நாட்கள் கழித்து இன்று (15.5.2020) பரிசோதனை செய்ததில் எவருக்கும் கொரோனா வைரஸ் நோய் தொற்று இல்லை என உறுதி செய்யப்பட்டது.

எனவே சென்னை, கோயம்புத்தூர், தர்மபுரி, ஈரோடு, கன்னியாக்குமரி, கரூர், மதுரை, நாகப்பட்டினம், பெரம்பலூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், சேலம், சிவகங்கை, தேனி திருநெல்வேலி, தூத்துக்குடி, திருப்பூர், திருவாரூர், விருதுநகர் ஆகிய மாவட்டத்தை சேர்ந்த 163 நபர்களையும், அந்தந்த மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். ஆந்திரா மாநிலத்தை சேர்ந்த 4 நபர்களையும், கர்நாடகா மாநிலத்தை சேர்ந்த 1 நபரும், அவர்களது சொந்த ஊருக்கு அனுப்பிவைக்கப்பட்டனர். திருச்சிராப்பள்ளி மாவட்டத்தை சேர்ந்த 10 நபர்களையும், சொந்த ஊருக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இவர்கள் அனைவரும், மத்திய சுகாதாரத்துறை வழிகாட்டுதலின் படி 14 நாட்கள் வீட்டில் தனிமை படுத்தி இருக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு.இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு:**

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருச்சிராப்பள்ளி.**